## முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய வழிகாட்டுதலில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்திய ‘ஃபார்முலா 4’ கார் பந்தயம் தெற்கு ஆசியாவுக்கே பெருமை!

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத்துறை வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்!

சென்னை,செப்.03

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய வழிகாட்டலுடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நடத்திய ஃபார்முலா 4 கார் பந்தயம்! தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, தெற்கு ஆசியாவிற்கே புதிய பெருமை தந்துள்ளது!தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத்துறை வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல் ஆகும்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு, இந்திய நாடளவில் எதிலும் முதலிடம் பெற வேண்டும் என்னும் தொலை நோக்குச் சிந்தனைகளுடன் புதியபல திட்டங்களை உருவாக்கி வடிவமைத்து நிறைவேற்றி வெற்றிகளை ஈட்டிப் புகழ் பதித்து வருகிறார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு அமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சீரிய குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் செயல்பட்டு ஒவ்வொரு களத்திலும் முத்திரைகள் பதித்து வருகிறார். அத்துடன், இளைஞர்களின் அறிவுத்திறன், உடல்திறன் வளர்ச்சிகளுக்கு ஊக்கத்தையும் உந்து சக்தியையும் அளித்து வருகிறார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் முயற்சியால் சென்னையில் உலகையே கவரும் வண்ணம் 31.8.2024 அன்று தொடங்கி சனி, ஞாயிறு இரண்டு நாள்களும் நடைபெற்று முடிந்துள்ளஃபார்முலா 4 கார் பந்தயம்பல்வேறு தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்அமெரிக்காவிலிருந்துவலைதளப் பதிவில், “ஃபார்முலா 4 சென்னை கார் பந்தயத்தை மாபெரும் வெற்றியடையச் செய்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சேர்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்” என்று குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார்.

தெற்கு ஆசியாவிலேயே இதுவரை நடைபெறாத மிக நீளமான சாலை கார் பந்தயம் இது என்னும் பெருமை இந்த பார்முலா 4 கார் பந்தயத்திற்கு உண்டு. இந்த 3.5 கி.மீ. நீள கார்பந்தயப் பகுதியில் மொத்தம் 19 வளைவுகள் இருந்தன.

பந்தய இடம் சென்னை மாநகரில் தீவுத் திடலில் தொடங்கி, போர் நினைவுச் சின்னம், நேப்பியர் பாலம், சுவாமி சிவானந்தாசாலை, அண்ணாசாலை வழியாக 3.5 கி.மீ., தூரத்தைக் கடந்து தீவுத் திடலிலேயே வந்து முடிவதாக இருந்தது.

### எந்தவித இடையூறுமின்றிப் போட்டிகள்!

விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், இந்தப் போட்டியை நடத்துவதில் தனிக் கவனம் செலுத்தி முறையாகத் திட்டமிட்டு எந்தவித இடையூறுமின்றிப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்திடும் ஆர்வத்துடன்,போட்டி நடைபெறும் பகுதியில் இரவிலும், பகலிலும் வருகை தந்து பார்வையிட்டு அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

### மின்னொளி விளக்குகள்

பந்தயத்தையொட்டித் தீவுத் திடலைச் சுற்றியுள்ள சுவாமி சிவானந்தா சாலை, நேப்பியர் பாலம் எனப் போட்டி நடைபெற்ற சாலைப் பகுதிகள் அனைத்திலும் உயரமான மின்னொளி விளக்குகள் அமைக்கப்பட்டு இரவையும் பகலாக்கி பந்தய வீரர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தது. பார்வையாளர்கள் போட்டிகளைப் பார்த்து ரசிக்க, அண்ணாசாலை, சுவாமி சிவானந்தா சாலை, தீவுத் திடல் முதலிய 8 இடங்களில் பார்வையாளர்களுக்கெனத்தனியே இருக்கைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

வாகனங்களை நிறுத்துவதற்காக, சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதான வளாகம், கலைவாணர் அரங்கம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை போட்டியைக் காண்பதற்கு வருகை தந்த மக்களுக்குச் சிரமமின்றி அமைந்திருந்தது.

ஃபார்முலா 4 கார் இந்தியன் சாம்பியன்ஷிப் பந்தயம் தனி நபராகவும், இந்தியன் ரேசிங்லீக் அணியாகவும் நடத்தப்பட்டது. ஃபார்முலாஎப்4 பந்தயத்தில் சென்னை டர்போ ரைடர்ஸ், கோவா ஏசஸ் ஜேஏ ரேசிங், ஸ்டுடெமான்ஸ் டெல்லி, பெங்களூரு ஸ்பீடெஸ்டர்ஸ், ஷ்ராச் சிராஹ்பெங்கால் டைகர்ஸ், ஹைதராபாத் பிளாக்பேர்ட்ஸ், அகமதாபாத் ரேசர்ஸ், காட்ஸ்பீடு கொச்சி ஆகிய 8 அணிகள் கலந்து கொண்டன. ஓர் அணிக்கு 2 வீரர்கள் வீதம் 16 பேர் கலந்து கொண்டனர். ஒவ்வொரு அணியிலும் 2 கார்கள் பயன்படுத்தப்பட்டன.

இந்திய ரேசிங் லீக் பந்தயத்தில் (ஐ.ஆர்.எல்) 6 அணிகள் கலந்து கொண்டன. ஒரு அணியில் 4 பேர் இடம் பெற்றனர். இதில் ஒவ்வொரு அணியிலும் தலா ஒரு வீராங்கனை இடம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் 18 வீரர்கள், 6 வீராங்கனைகள் என மொத்தம் 24 பேர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு அணியிலும் 2 கார்கள் வீதம் 16 கார்கள் பயன்படுத்தப்பட்டன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பந்தயத்தின் பயிற்சியை முதல்நாள் சனிக்கிழமையன்று கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

முதல் நாளில் வீரர்கள் பயிற்சிகளில் மட்டுமே ஈடுபட்டனர். இரண்டாவது நாளான நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தகுதிச் சுற்று மற்றும் பிரதான பந்தயங்கள் அனைத்தும் திட்டமிட்டபடி வெற்றிகரமாகநடைபெற்று முடிந்துள்ளன.

தகுதிச் சுற்றில் முதல் இடம் பிடித்த ஆஸ்திரேலிய வீரர் ஹக்பார்ட்டரேபந்தய தூரத்தை 19:42.952 வினாடிகளில் கடந்து இலக்கை அடைந்து போட்டியில் முதல் இடம் பிடித்து வெற்றி பெற்றார்.



இந்தியாவின் ருஹான் ஆல்வா பந்தய தூரத்தை 19: 50.251 வினாடி களில் இலக்கை அடைந்து இரண்டாவது இடம் பிடித்து வெற்றி பெற்றார்.

மூன்றாவது இடத்தில் பெங்களூரு ஸ்பீடெஸ்டர்ஸ் அணியில் அபய்மோகன் 20:09.021 வினாடிகளில் இலக்கை அடைந்து மூன்றாவது இடத்தைப் பிடித்தார். ஃபார்முலா 4 இந்தியன் சாம்பியன் ஷிப் போட்டியுடன் இந்தியன் ரேசிங் லீக் போட்டியில் ஜே.கே.ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியும் நடைபெற்றது.

பிற்பகலில் தொடங்கி மின்னொளி யில் இரவுவரை நடைபெற்ற இந்தப் பந்தயம் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது. பார்வை யாளர்கள் போட்டிகளை ரசித்து ஆரவாரம் செய்தது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. ரசிகர்கள் அதிக அளவில் குவிந்ததால் இந்த கார்பந்தயக் கொண்டாட்டத்தால் அந்தப் பகுதியே அதிர்ந்தது.

இறுதியாக வெற்றிபெற்றவர்களுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரிசுகளைவழங்கிப் பாராட்டினார். அப்போது உரையாற்றுகையில்,”சென்னையில் நடைபெற்று முடிந்துள்ள இந்த கார்பந்தயத்திற்குப் பொதுமக்கள் நல்ல வரவேற்பு அளித்துள்ளனர். வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ள இந்தக் கார் பந்தயப் போட்டியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று அடுத்த ஆண்டிலும் தொடர்ந்து நடத்துவது குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும்” என்று கூறினார்.

### கலந்து கொண்ட நாடுகள்!

இந்தப் போட்டிகளில் இங்கிலாந்து, போர்சுக்கல், செக்குடியரசு, பெல்ஜியம், டென்மார்க், சுவிட்சர்லாந்து, ஸ்பெயின், மலேசியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீரர்களும் வீராங்கனைகளும் கலந்து கொண்டனர்.

கார் பந்தயங்களில் உலக நாடுகளில் பலமுறை பங்கேற்று வெற்றிகள் கண்ட அனுபவங்களுடன் இந்தியாவின் முதல் ஃபார்முலா ஒன் பந்தய வீரர் நரேன் கார்த்திகேயன்ஃபார்முலா 4 கார் பந்தயம் குறித்துக் கூறும்போது,

“தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில், ஆற்றல்மிக்க விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்தியன் ஃபார்முலா 4 சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேசிங் லீக் சுற்றுகளுடன் இரவு நேர வீதிப் பந்தயத்தை தொடங்கி வைத்துள்ளார். இந்த முன்முயற்சி இந்திய கார் பந்தய வீரர்களுக்குச் சர்வதேசத் தளத்தில் போட்டியிடுவதற்கு ஒரு முக்கியமான தளத்தை வழங்கும்; மேலும் வெளிநாடுகளுக்குச் செல்லாமல் அவர்களின் திறன்களைக் கூர்மைப்படுத்தவும் விலைமதிப்பற்ற அனுபவத்தைப் பெறவும் உதவுகிறது. இந்த நிகழ்வு இந்திய மோட்டார் ஸ்போர்ட்ஸை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், உயர்மட்ட பந்தயத்திற்கான மையமாகத் தமிழ்நாட்டை நிலைநிறுத்தும். தெற்காசியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படும் சென்னை இந்தப் பந்தயத்தை நடத்துவது மேலும், சிறப்பாகும்”.என்று கூறி தமிழ்நாடு அரசைப் பாராட்டியுள்ளார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முழு முயற்சி செய்து மிகுந்த ஈடுபாட்டுடன் முன்னின்று நடத்திய சென்னை ஃபார்முலா 4 கார் பந்தயம் தமிழ்நாடு விளை யாட்டுத் துறை வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாக இடம் பெற்றுவிட்டது.

---

## திருவள்ளூர் மேற்கு மாவட்ட மகளிர் அணி –

# மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர், செப்.03-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வுக் கூட்டம் குறித்து மாவட்டச் செயலாளர் திருத்தினி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வு கூட்டம் 06-09-2024 அன்று வெள்ளிக் கிழமை காலை 10 மணி அளவில் திருத்தணியில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் (திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ) எனது தலைமையில் நடைபெற உள்ளது.



இக்கூட்டதில் மகளிர் அணி ஆணையம் தலைவர் மகளிர் அணி மாநில இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மாநில பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் பல்வேறு ஆலோசனைகள் வழங்க உள்ளனர்.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி, மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன்,

மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.இ. ஆதிசேஷன், ஒ.ஏ.நாகலிங்கம், மாஸ்டர். இ.குருதாஸ், டாக்டர் வி.சி. ஆர்.குமரன். பா.உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம். மிதுன்சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ். கே.ஆதாம் வி.கிஷோர். மு. சுப்பிரமணியம் பி.ராஜேஸ்வரி ரவீந்திரநாத், ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

எனவே மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், சமூக வலைதள பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டுகிறேன்.

கூட்டத்தில் முன்னதாக மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சரஸ்வதி சந்திரசேகரன், தொண்டர் அணி அமைப்பாளர் கோவிந்தம்மாள் வரவேற்புரையற்றிகிறார்கள்.

பொருள் : மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல், கழக முப்பெரும் விழா, கழக வளர்ச்சி பணிகள்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## தலைமை – வே.டில்லி பாபு! வரவேற்புரை – ப.குணாளன்!

# ஆலந்தூர் வடக்குப் பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் - டி. ஆர். பாலு எம்.பி. - ஆர். எஸ். பாரதி சிறப்புரை!

சென்னை, செப்.3

2026 - சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள ஆலந்தூர் வடக்குப் பகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (03.09.2024 ) செவ்வாய்கிழமை காலை 9.00 மணிக்கு மாவட்ட கழக அலுவலகம், ஆலந்தூர். (ஜோதி திரையரங்கம் அருகில்) நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு பகுதி அவைத் தலைவர் வே. டில்லி பாபு தலைமை வகிக்கிறார். ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஆலந்தூர் ப. குணாளன் வரவேற்புரையாற்றுகிறார். அமைச்சர் தா.மோ. அன்பரசன் - டி. ஆர். பாலு எம்.பி. - ஆர். எஸ். பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், பகுதி துணைச் செயலாளர்கள் கோ. கோடீஸ்வரன், ஐ. அழகேசன், ஜெயா செல்வம், பகுதி பொருளாளர் எம் சையத் அபுதாஹீர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர்- மண்டல குழு தலைவர் என். சந்திரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன்,

ஆலந்தூர் வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் ஜெ.செல்வேந்திரன், டி.ரவி ம.கோ.கருணாநிதி ப.கிருஷ்ணமூர்த்தி, கே.பி. முரளிகிருஷ்ணன், எம்.ஆர். சீனிவாசன், ஆலந்தூர் வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் கே.பாபுகுமார் பி.திருமாறன், ஜி.ஆர்.வெங்கடேசன், ச.பூவராகவன், த.மனோகரன், மு.முனியாண்டி, அ.குப்புசாமி, இரா.கீர்த்திராஜ், ம.சத்யா, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கலாநிதிகுணாளன், இ.கார்த்திக், சையத்சுலைமான், ஜெ.குமரன், அ.தீபக், ஜெ.சசிகுமார், எஸ்.வாசிம் ராஜா, பி.செல்வகுமார், இ. உதயகுமார், க.செந்தில்குமார், பால அமுதநாதன், பி.ஜாபர், அலி, ஜெ.அண்ணாதுரை, நெய்வேலி, தங்கம், ஆர்.விஜய சங்கர், பி.சிவராமன், குருதாயள் சிங், தி.மு.காமராஜ், எஸ். உதயகுமார், ஆர்.அன்பு, எழில், எஸ்.விக்கினேஷ், க.சிவராமன், க.சாந்தி, செண்பக வள்ளி, ஜெ.கிரண்புரூஸ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.